# “சக்தி வைத்தியம்” என்னும் சிறுகதைத் தொகுப்பில் வாழ்வியல் சிந்தனைகள்

***வே.புளோரா பவுளில் மேரி,** முனைவர் பட்ட ஆய்வாளர், *அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் கொடைக்கானல், அட்டுவாம்பட்டி.*

**முன்னுரை:**

உலகில் மனிதன் தோன்றிய நாளிலிருந்தே கதை சொல்லும் வழக்கமும் தோன்றி வளர்ந்தது. இலக்கியங்கள் தோன்றுவதற்கு முன்னரே குடும்ப விழாக்களில் கதை சொல்லும் வழக்கம் இருந்தது. மேனாட்டு மொழிகளில் பத்தொன்பதான் நூற்றாண்டில் தோன்றிய கதை இலக்கியம் தமிழில் இருபதாம் நூற்றாண்டில் வளர்ச்சி பெறத் தொடங்கியது. எதையும் எதார்த்த நோக்கில் இயற்கையோடு இயைந்து நோக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் சிறுகதை இலக்கியம் தோற்றம் பெற்றது. அந்த நோக்கமே சிறுகதை வளர்ச்சியை மேலும் வலுப்பெறச் செய்தது. சாகித்திய அகாதெமி விருது பெற்ற தி.ஜானகிராமனின் “சக்தி வைத்தியம்” சிறுகதைத் தொகுப்பில் ஆசிரியர் கூறியுள்ள வாழ்வியல் சிந்தனைகளை விரிவாக்க காண்போம்.

வாழ்க்கை என்பது ஒரு கலை. அக்கலையை அழகுபடுத்துவதும் அவரவர் கையில் தான் உள்ளது. மனிதனின் பழக்க வழக்கம், நாகரிகம், நம்பிக்கைகள், அறக்கருத்துகள், இன்பியல் செய்திகள், துன்பியல் செய்திகள் அனைத்தும் அவன் வாழ்வைப் பாதிக்கின்றன. அவர்கள் வாழும் நிலத்திற்கேற்பவும், காலத்திற்கேற்பவும் வாழ்க்கை முறையும் மாறுகிறது. இதன் அடிப்படையில் சக்தி வைத்தியம் என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள வாழ்வியல் சிந்தனைகளை இனங்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

**“சக்தி வைத்தியம்” சிறுகதை தொகுப்பில் வாழ்வியல் சிந்தனைகள்:**

“சக்தி வைத்தியம்” என்ற சிறுகதைத் தொகுப்பில் ஆசிரியர் தி.ஜானகிராமன் அவர்கள் குறிப்பிட்டுள்ள வாழ்வியல் சிந்தனைகளில் ஒரு சில செய்திகள் மட்டும் இங்கு ஆராயப்படுகின்றன.

1. கல்வி
2. திருமணம்
3. லஞ்சம்
4. வறுமை
5. வேலையின்மை
6. கற்பு

போன்றவை பற்றி ஆசிரியர் நம் நூலில் கையாண்டுள்ள விதத்தினைக் காண்போம்.

**கல்வி:**

கல்வி என்பதை ஒரு தனி மனிதனுக்கு கற்பிக்கப்பட வேண்டியது அவசியம் ஒருவன் தன் வாழ்நாளில் முழு சுதந்திரத்தோடு வாழ அவனை தகுதிபடுத்துவது அவன் கற்ற கல்வி ஆகும். கல்வி கற்பதால் அறிவும், ஒழுக்கமும் மேன்மையடைகிறது. கல்வியின் சிறப்பை உணர்ந்த ஆசிரியரும் தம் சிறுகதைத் தொகுப்பில் அனைவரும் கல்வி கற்க வேண்டுமென்பதை பின்வருமாறுக் குறிப்பிட்டுள்ளார்.

> **“குழந்தைகளை கல்வியில் திறமையாக வளர்ப்பதை**
> **தானே தொழிலா வச்சிருக்கேன். பெரியவன் அடுத்த**
> **வரும்ஷம் எஸ்.எஸ்.எல்.ஸி எழுதப் போறான்**
> **இரண்டாவது பொண்ணு எட்டாங்கிளாஸ்**
> **படிக்கிற மூணாவது பையன் அவன் ஆறாம்**
> **கிளாசு நாலாவது பொண்ணு நாலாம்**

கிளாசு அஞ்சாவது இந்தப்பய உங்க
சிஷ்யன் அரைக்கிளாசு தான் என்றாள்" (சக்தி வைத்தியம் பக்.84)

இச்செய்தியின் மூலமாக ஒரு குடும்பத்தில் குழந்தை முதல் அனைவரும் கல்வி கற்க வேண்டுமென்ற செய்தியை ஆசிரியர் இங்கு சுட்டிக்காட்டியுள்ளார். திருக்குறளும் கல்வியின் முக்கியத்துவம் பற்றி குறிப்பிட்டுள்ளது.

"கண்ணுடையார் என்பர்கற்றோர் முகத்து இரண்டு
புண்ணுடையார் கல்லா தவர் (திரு.393 பா)

கண்கள் உடையவர்கள் என்று சிறப்பாகச் சொல்லப்படுபவர்கள் கற்றவர்களே கற்காதவர்கள் முகத்தில் இரண்டு புண்களை உடையவர்கள்" என்று வள்ளுவர் கூறியுள்ளார். ஆகவே அனைவரும் கற்க வேண்டும் அறிவு தெளிவடைய வேண்டும்.

**திருமணம்:**

சமுதாயத்தில் திருமணம் என்பது ஒரு சடங்கு முறை. அதுமட்டுமல்ல திருமணம் என்பது ஒரு நல்ல உறவுமுறை. ஓர் ஆணுக்கும், ஒரு பெண்ணுக்கும் இணைந்து நடைபெறும் ஒரு நல்ல ஒப்பந்தம் தான் திருமணம். இத்திருமணம் பற்றிய செய்திகளை தம் சிறுகதை தொகுப்பின் மூலமாக விளக்கியுள்ளார். 'அட்சாரப் பிராயம்' என்ற சிறுகதையில் திருமணம் பற்றிய கருத்துக்கள் இடம் பெறுகின்றன.

"பெரிய உடையார் வீட்டுக் கல்யாணத்தில்
கொல்லைத் தாழ்வாரத்தில் கோட்டையடுப்புப்
போட்டுச் சமையல் நடந்து கொண்டிருந்தது.
தவசிக்கு கைப்பிள்ளையாக ஓடுகிற
ஐயாறு ஒரு பூசணிக்காயைக் கீழே போட்டு
உடைத்து, அதை அரிவாள் மணை மீது
உட்கார்ந்து நறுக்கிக் கொண்டிருந்தான்.
திருமண காரியங்கள் தடபுடலாக நடந்தது." (பக்.33 - 36)

என்று திருமணம் பற்றி ஆசிரியர் கூறுவதை உணர முடிகிறது. திருமணம் பற்றி சிலப்பதிகாரமும் குறிப்பிட்டுள்ளது.

இருபெரும் குரவரும் ஒருபெரு நாளில்
மண அணிகாண மகிழ்ந்தனர் மகிழ்துழி
யானை எடுத்தத்து அணி இழையார் மேல்இரீஇ
மாநகர்க்கு ஈந்தார் மணம் (சில பா 40)

அதாவது மாநாய்கன் திருமகள் கண்ணகி. மாசாத்துவான் செல்வன் கோவலன். இருவரையும் அவ்விருவரின் பெற்றோர்களும் ஒரு நல்ல நாளில் மணமக்களாக நிச்சயித்தனர். இந்த மகிழ்ச்சியான இனிய சேதியினை ஊர் எல்லாம் அறியச் செய்ய அலங்கரிக்கப்பட்ட யானையின்மேல் அணி மணி புனைந்த அழகிய பெண்ணை உட்கார வைத்து புகார் நகர் முழுவதும் சென்று செய்தி அறிவிக்கச் செய்தனர்" என்பதன் மூலம் சமூகத்தில் திருமணம் முக்கிய இடம் பெற்றதை சிலப்பதிகாரத்தின் மூலமாகவும் உணர முடிகிறது.

**லட்சம்:**

லஞ்சம் என்பது திறமைக்கு இடம் கொடுக்காமல் பணத்தை வைத்து அனைத்தையம் சாதிப்பது ஒட்டு மொத்த பணியாளர்கள் மீதும் கறைபூச்ச செய்து விடுகிறது. சமுகத்தில் லஞ்சம் மாபெரும் குற்றமாக கருதி தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் இன்று அவை மிகப்பெரிய சமூக அவலமாக மாறிவிட்டது.

இதன் மூலம் சமுதாயத்தில் பண வசதி உடையோர் மட்டுமே முன்னேற முடியும். வசதியற்ற ஏழைமக்கள் திறமை இருந்தும் முன்னேற முடியாத நிலை ஏற்படுகிறது. லஞ்சம் பற்றிய செய்திகளை ஆசிரியர் தம் சிறுகதைத் தொகுப்பில் குறிப்பிட்டுள்ளார். 'நாயக்கர் திருப்பணி' என்ற சிறுகதையில் லஞ்சம் பற்றிய கருத்துக்கள் இடம் பெற்றுள்ளது.

"நாயக்கா பின்னால் கையைக்கட்டி
வெற்றியுடன் பார்த்தார். போலீஸ்
மெரட்டினா ரெண்டு ரூபாயைக்
கொடுத்தாலும் கொடுப்பானுவ.
இதுக்கு எவ்வளவு கிராக்கி
பண்றானுக பார்த்தீங்களா?
என்று பொதுவாக எல்லாரையும்
பார்த்துச் சொன்னார்"

இச்செய்தி மூலமாக சமூகத்தில் லஞ்சம் வாங்குவதல் மிகுந்து இருப்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டியிருப்பதை உணர முடிகிறது. இதுமட்டுமின்றி "வேலியும் பயிரும்" என்ற சிறுகதையில் லஞ்சம் பற்றிய செய்திக் குறிப்பிட்டுள்ளது.

**"கான்ஸ்டபில் கண்ணாயிரம் கண்ணி வைத்துப்**
**பிடிபட்டார்! பத்து ரூபாய் லஞ்சம் வாங்கும்**
**போது அவரைக் கையும், களவுமாக**
**மடக்கி விட்டார்கள் லஞ்ச ஊழல்**
**ஒழிப்பு அதிகாரிகள் ஆயிரம் ஆயிரமாக**
**வாங்குபவர்களை விட்டு விடுகின்றனர்"**

என்பதன் செய்தி மூலமாக லஞ்சம் ஒழிப்பு துறை இருந்தும், லஞ்சம் பெறபடும் செய்தியை அறிந்து கொள்ள முடிகிறது.

**வறுமை:**

சமூகத்தில் உள்ள ஒவ்வொரு பிரிவினருக்கும் பொருள் கிடைக்கப்பெறாத நிலையே வறுமை. நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்கள் வறுமை நிலையில் வாழ்கின்றனர். வளர்ச்சி பெறாத நாடுகளில் மட்டுமின்றி வளர்ச்சி பெற்ற நாடுகளிலும் இவ்வறுமை காணப்படுகிறது. மனிதன் பிறந்த காலம் முதல் தொட்டு தொடர்ந்து வரும் ஒரு தொடர் கதையாக வறுமை இருக்கிறது.

இத்தகைய வறுமை பற்றி ஆசிரியர் தம் சிறுகதைத் தொகுப்பில் குறிப்பிட்டுள்ளார். 'கோதாவரி குண்டு' என்ற சிறுகதையில் வறுமை என்பது சித்தரிக்கப்பட்டுள்ளது.

**"பின் கோடியில் கறுப்பும் நரையும்**
**ஓடிய ஒரு சுவர் தெரியும். வீடு**
**இருந்ததன் கடைசிச் சின்னமும்**
**அத்தாட்சியுமாக இருந்த ஒரே**
**அறையின் சுவர் அது. கங்காபாயின்**
**புடவையில் கண்ணுக்குத் தெரிந்து**
**பதினைந்து ஒட்டுக்களாவது இருக்கும்"**

என்ற வார்த்தைகளின் மூலம் வறுமையின் கொடூரத்தை பற்றி ஆசிரியர் குறிப்பிட்டுள்ளதை உணர முடிகிறது. இத்தகைய வறுமை பற்றி சிறுபாணாற்றுப் படையும் சுட்டிகாட்டியுள்ளது.

**"ஓல்கு பசி உழந்த ஒடுங்கு நண் மருங்கில்**
**வளைக்கை கிணைமகள் வள்ளுகிர்க்குறைந்த**
**குப்பை குப்பை வேளை உப்பில வெந்ததை (சிறு ஆற்று 275பா)**

அதாவது பெரும்பசி கொண்ட நிலையில் தன் உயிர் நிலைக்க வேண்டி குப்பைக் கீரையை உப்பின்றி அதனை வேக வைத்துக் கதவு அடைத்து உண்ணும் வறுமை" நிலையை உணர முடிகிறது. இதன் மூலம் வறுமை எவ்வளவு கொடுமையானது என்பதை நாம் அறிய முடிகிறது.

**வேலையின்மை:**

இன்றையச் சமுதாயத்தில் வேலையில்லா திண்டாட்டம் ஒரு மிகப்பெரிய பிரச்சனையாக இளைஞர்களிடம் அமைந்துள்ளது. படித்த தகுதியான பலர் இருக்கிறார்கள். அதற்கேற்ப வேலை வாய்ப்புகள் இல்லை. வேலைக்கேற்ப ஊதியம் இல்லை.

இத்தகைய நிலை பற்றி 'கோதாவரி குண்டு' என்ற சிறுகதையில் ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**"தலைவாசல் ஆபீஸில் மேனேஜர் உங்களுக்கு**
**வேண்டியவாளாமே. என் பையன் படிப்பை**
**முடிச்சுட்டான் ஒரு வருஷமாச்சு நூறுமனுப்**
**போட்டாச்சு. வேலை கிடைக்கலே. நீங்க**
**அவர்களை பார்த்து என்று கெஞ்சினார்."**

இதன் மூலமாக திறமை இருந்தாலும் வேலைக்குச் செல்ல சிபாரிசு தேவையாக உள்ளது என்பது நமக்குத் தெளிவாக காட்டப்பட்டுள்ளது. சிறுகதை தொகுதி இரண்டிலும் வேலையின்மை பற்றிய கருத்துக்கள் இடம் பெறுகின்றன.

"சங்கரா ஒனக்கு மட்டுமாடா வேலையில்லை ஊர்ல இருக்கே? எவ்வளவு பிள்ளைகள் வேலையில்லாமல் உன்னை மாதிரி படிச்சுப் போட்டு வீட்ல இருக்கு. உன்னை மாதிரி ஆடம்பரங்களை என்னைக்காவது குறைத்திருக்கிறார்களா? வீட்டுக்கு வீடு வாசல்படி என்றாள்"

இச்செய்தி மூலமாக வேலையின்மையால் இளைஞர்களிடம் காணப்படும் மன உளைச்சலை சிறுகதை தொகுதி இரண்டின் மூலமாக உணர முடிகிறது.

**கற்பு:**

கற்பு என்பது ஆண் பெண் இருவருக்கும் உடைய ஒரு ஒழுக்கம். இது தவறினால் சமுதாயத்தில் இவர்கள் மதிக்கப்படமாட்டார்கள் மற்றவர்களில் இவர்கள் இழிவாகப் பேசப்படுவார்கள். ஒரு பெண் கடைசி வரை கற்புக்கரசியாக ஒழுக்கமுடன் இருப்பாளா? இல்லையா? என்பது அவர்களின் செயலால் அறியலாம். கற்பு நெறி தவறும் பெண்களும் உண்டு. தங்கள் கணவனுக்கு துரோகம் செய்யும் பல பெண்களும் உண்டு. மனைவிக்குத் துரோகம் செய்யும் ஆண்களும் உண்டு. இக்கருத்துக்களை ஆசிரியர் தம் சிறுகதைத் தொகுப்பிலும் அழகாகக் கையாண்டுள்ளார். 'வீடு' என்ற சிறுகதையில் கற்பு பற்றிய கருத்துகள் இடம் பெறுகின்றன.

**"அம்புகீழே படுத்திருந்தாள். அவளுக்குப் பிடித்த**
**தாழம்பூ நிறப்புடவை மாதிரி தான் இருந்தது.**
**குழந்தைகள் இரண்டையும் காணவில்லை.**
**கட்டில் மீது என் படுக்கை விரித்துக் கிடந்தது.**
**ஒரு மனிதன் உருவமும் பனியன் போட்டு**
**படுத்திருந்தது. ஒரு தலையணையை அழகாகக்**
**கட்டிக் கொண்டு அயர்ந்து உறங்கிக்**
**கொண்டிருந்தது. உற்றுப்பார்த்தேன்**
**பெரியடாக்டர் தான் என்பதை அறிந்தும்**
**என் உள்ளம் நடுங்கியது"**

இதில் ஒரு பெண் தடுமாறும் நிலையை கற்பு பற்றிய செய்திகள் ஆசிரியர் கூறுவதன் மூலமாக அவள் தவறாகச் செல்லும் பாதையை அறிய முடிகிறது. திருமந்திரத்திலும் இவை பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளது.

**"இலைநல ஆயினும் எட்டி பழுத்தால்**
**குலை நலவாம் கனிகொண்டு உணல் ஆகா**
**முலை நலம் கொண்டு முறுவல் செய்வோர் மேல்**
**விலகுறு நெஞ்சினை வெய்து கொள்ளீரே** (திரும 247 பா)

நஞ்சுப்பழுக்கும் எட்டி மரம், அதில் இலைகள், காய்கள் அழுகுடனும் இருக்கும். அதில் பழுக்கும் கனிகளை தின்னலாமா? கூடாது. இது போல தான் முல்லைப்பல் சிரிப்பழகையும், மார்பழகையும் உடைய பெண்களுடன் கூடி பெறுவது ஒன்றுமில்லை" அவர்கள் நாடி செல்வதை விட்டுவிடுங்கள் என்று கூறுவதன் மூலமாக யாரும் கற்பு நெறி தவறக்கூடாது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

**முடிவுரை:**

ஜானகிராமனின் "சக்தி வைத்தியம் என்ற சிறுகதைத் தொகுப்பில் காணப்பட்ட வாழ்வியல் சிந்தனைகளை பற்றிய பல்வேறு செய்திகள் ஆராயப்பட்டது. இதில் கல்வி, திருமணம், லஞ்சம், வறுமை, வேலையின்மை,கற்பு போன்றவற்றால் சமூகத்தில் ஏற்படும் சமூக கொடுமைகள் பற்றியும் கல்வியின் சிறப்பு, திருமணம் என்ற சமூதப் பழக்கவழக்கங்கள் பற்றியும் உதாரணத்துடன் கூறியிருப்பது இவ்வியலுக்குச் சிறப்புடையாதாக அமைகிறது. மொத்தத்தில் இவ்வியலில் சிறந்த வாழ்வியல் கருத்துக்களை கூறியிருப்பது அதை படிப்பவருக்குப் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

# கு.அழகிரிசாமி சிறுகதைகளில் இடம் சார் வாழ்வியல்

வே. புளோரா பவுலின் மேரி
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல், தமிழ்நாடு, இந்தியா.

**முன்னுரை:**

மனிதனின் வாழ்க்கை முறையை நிர்ணயிப்பதில் அவன் பிறந்த மண்ணும் வாழும் சூழலும் முக்கியப் பங்கினை வகுக்கின்றன. இலக்கியம் வாழ்க்கையிலிருந்தே தோன்றுகின்றது என்ற கருத்தும் இதன் மூலம் பெறப்பட்டதேயாகும். ஒரு மனிதனுக்குப் பிறந்த மண்ணும் வாழிடமும் தான் அவனின் வாழ்க்கை நெறியை வகுத்தளிக்கின்றன. இடம் இல்லையேல் படைப்பும் உருவெடுப்பதில்லை. கதை நிகழும் களமே வாசகருக்கு கதையின் முழுத்தன்மையையும் உள்வாங்கிக் கொள்ளவும், இடம் பற்றிய புரிதலை விளங்கிக்கொள்ளவும் ஏதுவாக அமைகின்றது. அந்தவகையில், சாகித்ய அகாதெமி விருதுபெற்ற கு.அழகிரிசாமியின் அன்பளிப்பு சிறுகதைத் தொகுப்பில் இடம் சார் வாழ்வியல் சித்தரிப்பை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**சிறுகதைகளில் இடம் சார் பின்னணி**

இலக்கியத்திற்குப் பூகோள எல்லைகள் கிடையாது. எனினும் எவ்வெவ்விலக்கியமும் அவ்வவ் நிலத்தின் நீர்மைக்கேற்ப நிகழ்வதாலேயே உயர்ந்தோங்கும். ஒரு குறிப்பிட்ட வட்டார மக்களின் வாழ்க்கை அம்மண்ணுக்குத் தக அமைந்துள்ளது அவர்கள் வழங்கும் வழக்கு நடையில் வடிவெடுப்பதே வட்டார வண்ண இலக்கியமாம். இவ்வட்டாரவியல் வாய்மை நடப்பியலின் உட்பகுப்பே என்பர். இதன் வாயிலாகக் குறிப்பிட்ட வட்டார மக்களின் சமுதாய வாழ்க்கை, அவர்தம் நடையுடை பாவணைகள், நடை முறைப் பேச்சு வழக்கு நாகரிக ஒழுகலாறு, நாட்டுப்புற பாடல்கள், நம்பிக்கை, வரலாறு முதலியவை சிறப்பாகச் சித்தரிக்கப்படுகின்றன. அனைத்திற்கும் மேலாக இவ் வட்டாரவியலுக்கு இன்றியமையா ஒன்று குறிப்பிட்ட வட்டார மண்மணமேயாகும். அம்மண் மணமே ஊடுருவி இழையோடும் உயிரின் மூச்செனலாம். இதுமட்டுமல்லாமல் ஏதோ அந்தப் பிரதேசத்துக் கொச்சைச் சொற்களை அள்ளிக் கொட்டிவிட்டால் போதும், ஒரு இடத்தைப் பூகோள ரீதியாக வர்ணித்து விட்டால் போதும் என்பதில்லை. ஒரு இடத்து மண்ணுக்குரிய தனிவித சுபாவம் காற்றாக எங்கும் பரவியிருக்க வேண்டும். அது தான் பிரதேச சிறுகதைக்கு மூச்சாக அமையும். இங்கே நந்தமிழ் மண்ணுக்குத் தக அமைந்த தமிழ் நாவல் மற்றும் சிறுகதை இலக்கியங்களை எடுத்துக் கொண்டால், ஆர். சண்முக சுந்தரம் அவர்கள் கொங்கு மண்ணையும், இராமையா அவர்கள் மதுரை வட்டாரத்தையும், சி.சு.செல்லப்பா மதுரை முகவை வட்டரங்களையும் ராஜம் கிருஷ்ணன் - நீலமலைப் படகர்களையும், ஹெப்ஸிபா சேசுதாசன் - குமரிப் பனையேறி நாடார்களையும், திஜானகிராமன் தஞ்சை (குடந்தை) வட்டாரத்தையும் அப்படியப்படியே நம் முன்னே சித்தரித்து விடுகின்றனர். இச் சித்தரிப்பின் வாயிலாக பல்வேறு வட்டார மக்களின் பழக்கவழக்கம், பேச்சுத்திறம், சொற்களின் வேறுபாடு இவற்றையெல்லாம் பல இடங்களுக்கு சிறுகதையின் வாயிலாக பல ஆசிரியர்கள் கொண்டு செல்கின்றவிதம் அழகாகத் தென்படுவதை அறியமுடிகின்றது.

சிறுகதைகளில் இடம்சார் பின்னணி முக்கியப் பங்கு வைப்பதாகவே உள்ளது. அந்த வகையில் ஏதாவது ஒரு குறிப்பிட்ட பின்னணியில் தான் ஒரு கதையைச் சொல்ல முடியும் இதனை இருவகையாக பிரிக்கலாம். இடப்பின்னணி, காலப்பின்னணி, கதை நிகழும் இடம் பற்றிக் குறிப்பிடுவது இடப்பின்னணி, அஃதாவது கதை நிகழும் களம். கதை நிகழும் காலம் பற்றிக் குறிப்பிடுவது காலப்பின்னணி ஆகும்.

**"உணர்ச்சிகள் இடச்சூழலைச் சார்ந்து அமைகின்றது. உணர்ச்சிகளுக்குத் தம் கதையில் முதலிடம் தர நினைத்த புதுமைப்பித்தன் அது பிறந்ததற்கு ஏதுவான இடத்தையும் குறிப்பிடுகிறார் காலனும் கிழவியும். சங்குத் தேவனின் தர்மம், நாசகாரக் கும்பல் முதலிய கதைகளை அவ்வக் கதைகளின் இடத்தோடுதான் நினைவு கூர முடிகிறது என்பர். மா. இராமலிங்கம்."**[1]

**"புதுமைப்பித்தனின் பெரும்பாலான கதைகள் தென்பாண்டி நாட்டுக் கிராமங்களைக் களமாகக் கொண்டு புனையப்பட்டுள்ளன. முருக்கம்பட்டி, சிவந்திப்பட்டி, வாசவன்பட்டி, வாணிதாசபுரம், பொன்னகரம், கோபாலபுரம் போன்ற ஊர்களை இடப்பின்னணியாகக் கொண்டுள்ளன."**[2] கு.அழகிரிசாமி அவர்களின் சிறுகதைத் தொகுதிகளில் இடம்சார் வாழ்வியல் பற்றிக் காண்போம்.

### கு.அழகிரிசாமியின் சிறுகதைகளில் இடம் சார் வாழ்வியல்:

கு.அழகிரிசாமி அவர்களின் சிறுகதைகளில் 'இடம்' குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது. இவரது பெரும்பாலான கதைத் தொடக்கங்களில் இடம் சார் உணர்வைக் தெளிவாகக் காணலாம். பெரும்பாலான கதைகள் கரிசல் பகுதி, சென்னைப்பகுதி போன்ற இரண்டு களங்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை. கரிசல் பகுதி இயற்கையுடனும், வறுமைப் பின்னணியுடனும், சென்னைப் பகுதி நெரிசலை மையமிட்டும் அமைந்துள்ளமை குறிப்பிட்டத் தக்கதாகும்.

1923-ல் பிறந்த கு. அழகிரிசாமி 1942 வரை இருபது ஆண்டுகள் கரிசல் பகுதியான இடைசெவலில் வாழ்ந்திருக்கிறார். அவ்வனுபவ அடிப்படையில் கரிசலைக் களமாகக் கொண்டு முப்பத்தாறு கதைகள் எழுதியுள்ளார் என்பதும் உண்மை. இதனை தொடர்ந்து 1943 முதல் 1970 வரை மலேயா சென்ற ஐந்து ஆண்டுகள் நீங்கலாக இருபத்து மூன்று ஆண்டுகள் சென்னையில் வாழ்ந்தார். அவ்வனுபவ நிகழ்வுகளை அடிப்படையாக வைத்து சென்னையை மையமிட்டு நாற்பத்து மூன்று கதைகள் எழுதியுள்ளார்.

1952 முதல் 1957 வரை மலேயாவில் வாழ்ந்த கு. அழகிரிசாமி அவ்வனுபவ அடிப்படையில் மேற்கண்ட மூன்றுகதைகளான 'ஆதாரம் இருக்கிறதா? கண்ணமா, கார்வாங்கிய சுந்தரம்' ஆகிய கதைகள் மலேயாவைக் களமாக்க கொண்டு எழுதியுள்ளார். ஆனால் இவை முழுவதும் தமிழினம் சார்ந்தே எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கு.அழகிரிசாமி அவர்கள் இடம் சார் உணர்வினை இப்படி எடுத்துரைக்கின்றார். **"இடம் இங்கே அருமையானது. அதை நீங்கள் அவசியம் பார்க்கணும் என்று என்னை அழைத்துச் சென்றார். கவர்ன்மென்ட் எஸ்டேட்டில், ராஜாஜீ ஹாலை ஒட்டிய கட்டிடப் பகுதி மாடி மிக விசாலமான இடம். வெயில் தெரியாதபடி எப்பவும் குளு குளு என்றிருக்கும் நிழல். கடல் காற்று சுகமாக வீசும் இதமான பகுதி. அருமையான இடம்தான். நமக்கெல்லாம் வசிப்பதற்கு இது போன்ற இடமும் கொடுத்து, மாதம் தோறும் இருநூறு ரூபாயும் ஒழுங்காகத் தந்து இஷ்டம் போலே...... என்ன வேண்டுமானாலும் எழுதிக்கிட்டிருங்க என்று சொன்னால் நல்லாயிருக்கும். நாம் நிறையப் படிக்கவும் முடியும். அருமையான கதைகள், நாவல்களை எழுதவும் முடியும். அப்படி ஒரு ஏற்பாடு இருந்தால் நமக்கு நல்லது. தமிழுக்கு நல்லது. ஆனா இந்த நாட்டிலே அது மாதிரியெல்லாம் ஒரு காலத்திலும் நடக்காது."**[3] என்ற பகுதியில் இடம் பற்றிய செய்தியின் முக்கியத்துவத்தை உணரலாம்.

"எங்கிருந்தோ வந்தார்' கதையில் குருமலையின் பெருமையைப் பற்றிக் குறிப்பிடும் கு.அழகிரிசாமி அவர்கள். அழகிரிசாமி என்ற கதைப் பாத்திரத்தைக் கு.அழகிரிசாமியின் வெளிப்பாடாகக் கருத இடமுண்டு என்பதை அறிய முடிகின்றது. வேணுகோபால் பேசும்போது,

குருமலைக் காத்து வேலூரிலே கிடைக்குமோ? அதுசரி குருமலை ரொம்பப் பக்கமோ? கண்ணுக்கே தெரியல்லையே.....! என்று கேட்கிறார். அதற்கு கு.அழகிரிசாமி அது ஏழெட்டு மைலுக்கு அங்கிட்டு இருக்கும் ஒரு காலத்திலே அந்த மலைக்காத்துக்கு மகிமை இருந்தது வாஸ்தவம் தான். சஞ்சீவி பர்வதம்னே அதுக்கு பேரு....... "ஏன் இப்போ என்ன வந்தது?

**"மலையிலே இப்போ ஒரு மரம் கிடையாது. எல்லாத்தையும் வெட்டி விறகுக்குப் போட்டுட்டாங்க. பச்சையாத் தெரிஞ்ச மலை இப்போ சரள் மேடா, சிகப்பா இருக்கு. முன்னாலே குருமலையிலே தான் மழை இறங்கும். அப்போ சுத்துக் கிராமங்களிலே கட்டாயம் மழை பெய்யும். இப்போ மலை மொட்டையாகப் போகவே, அங்கே மழை இறங்குறதும் இல்லை. நாலஞ்சு வருஷமாச்சு சுத்துக் கிராமங்களிலே பருவ மழையும் பெய்யாமப் போச்சு"**[4] என்று குறிப்பிடுகின்றார்.

இவ்வுரையாடல் கு.அழகிரிசாமி அவர்களின் கரிசல் மண் ஈடுபாட்டின் எதிரொலியாக அமைகின்றது.

அடுத்த படியாக கு.அழகிரிசாமி அவர்களின் நாற்பத்து மூன்று கதைகள் சென்னைப் பகுதியை மையமிட்டதாக அமைகின்றன. மயிலாப்பூரில் ஐந்து கதைகளும், மாம்பலம் திருவல்லிக்கேணி ஆகிய பகுதிகளில் முறையே நான்கு கதைகளும், சிந்தாதிரிப் பேட்டையில் இரண்டு கதைகளும், நுங்கம்பாக்கம் முதலான சில இடங்களில் ஒவ்வொரு கதையும் நிகழ்ந்துள்ளன. கு.அழகிரிசாமி அவர்களின் பெரும்பகுதி வாழ்வுக்காலம் சென்னையில் கழிந்தது என்றாலும், சென்னையோடு அவரால் சிறிதும் ஒன்ற முடியவில்லை. சென்னையில் நெரிசலும், சென்னை வாழ் மக்கள் பிறரிடமிருந்து விலகி நிற்கும் மனப்போக்கும் இதற்குக் காரணங்கள் என்றே சொல்லலாம்.

சென்னை நகர நெரிசலைப் பற்றி, 'இருசகோதரர்கள்', 'ஒரு மாத லீவ்', 'ஒருவன் இருக்கிறான்', 'கற்பக விருட்சம்', 'காற்று சிறுமை கதை', 'தேவஜீவனம்', 'நல்லவள்', 'புரட்சி எழுத்தாளரின் கதாநாயகி', 'மற்றொரு பயிற்சி', 'வசந்தாவின் தந்தை' ஆகிய பதினொரு கதைகளை கு. அழகிரிசாமி எழுதியிருப்பது இதனை மெய்ப்பிக்கும். இக்கதைகள் சென்னை நெரிசலின் பன்முகத் தன்மையைப் பிரதிபலிக்கக் காணலாம்.

கு. அழகிரிசாமியை நெரிசல் நேரடியாகப் பாதித்ததால் இக்கதைகளை உருவாக்கியிருக்கின்றார் என்று கொள்ள இடமுண்டு. கதையில் காணும் நெரிசலைத் தெரு நெரிசல், வீட்டு நெரிசல் என்று இரண்டாகப் பகுத்துக் காணலாம். தெருவின் நெரிசலான தன்மை ஆசிரியரைப் பாதித்திருந்தமைக்குச் சான்றாக,

**"அது ஒரு திருவல்லிக்கேணித் தெரு. வழக்கம் போல் தெருப் பிடிக்காதவாறு ஜனங்கள். ஆணும் பெண்ணுமாக இங்கும் அங்கும் போயிக் கொண்டிருந்தார்கள். நிமிஷத்திற்கு ஒரு சைக்கிள் வீதம் ஓடிக் கொண்டிருந்தது. ஏகதேசமான டாக்ஸி, ஸ்கூட்டர் போன்ற வாகனங்கள் தெருவின் ஜனக் கூட்டத்தை ஆங்காங்கே சுவரோடு சுவராக ஒண்டச் செய்து கொண்டு ஓடின. தலைச்சுமை வியாபாரிகள், கிரோசின், காய்கறி தள்ளுவண்டிகள், பலூனை வாத்தியமாக்கிச் சினிமாப் பாட்டைக் கொறகொறத்துக் கொண்டு போகிறவன், பால்காரனோடும் பால்காரனில்லாமலும் நடந்து வரும் எருமைகள், பசுக்கள், தெருவின் இரண்டு கோடிகளையும் பொது கக்கூஸ்களாகப் பயன்படுத்திக் கொள்ளும் ஆசாமிகள் இப்படி இடங் கொள்ளாமல் நிரம்பி வழியும் தெருவில் கூச்சலும் இரைச்சலும் இருக்க வேண்டிய அளவுக்கு இருந்தன."**[5] என்ற பகுதியைச் சான்றாகக் கூறலாம். கு. அழகிரிசாமி குறிப்பிடும் இந்தத் தெரு அவர் குடியிருந்த திருவல்லிக்கேணி செங்கல்வராய முதல் தெரு என்பதைச் சீதாலட்சுமி நினைவு கூறுகிறார். (சீதாலட்சுமி அழகிரிசாமி, நேர்காணல்) தெரு மிகவும் சிறியதாய் இருந்தமைபற்றிய குறிப்பைக் காட்டுகிறது.

**"இந்த சின்னத் தெருவில் இத்தனைபேர் நடமாட்டம். இத்தனை பேர் குடித்தனம். இந்த முப்பது நாற்பது வீட்டிலே ஆடு, மாடுகள் மாதிரி அடைஞ்சி கிடக்க வேண்டியிருக்கு. ஆடு மாடாவது பட்டப்பகல்லே காடு கரைக்கு மேய்ச்சலுக்குப் போகும். இங்கே மனுஷனுக்குக் வீட்டை விட்டா போக்கிடம் இல்லாமல் இருக்கு என்று குறிப்பிடுவதால் நெரிசலின் கனம் கூடிவிடுகிறது."[6]**

கரிசல் பகுதி மற்றும் சென்னைப் பகுதியைக் களமாக்கிக் கொண்ட கதைகள் மட்டுமல்ல. இவை தவிர்த்து கு.அழகிரிசாமியின் அனுபவத்திற்குட்பட்ட இடங்களான கன்னியாகுமரி, மதுரை, திருச்சி, காஞ்சிபுரம் ஆகிய பகுதிகளும் அயல்நாட்டுப் பகுதியான மலேயாவும் இவரது கதைகளில் களமாகியுள்ளன.

'தமிழ் நேசன்' என்ற பத்திரிகையில் துணை ஆசிரியராகப் பணியாற்ற மலேயா சென்றிருந்த கு. அழகிரிசாமி அங்கு ஏற்பட்ட தம் வாழ்க்கை அனுபவங்களைத் தம் கதைகளில் கொண்டு வந்திருக்கிறார். "ஆதாரம் இருக்கிறதா?" "கண்ணம்மா" "கார் வாங்கிய சுந்தரம்" ஆகிய மூன்று கதைகள் மலேயாவின் பின்னணியில் அமைந்த கதைகளாக இருப்பதற்கு அவரது மலேயா வாழ்க்கை அனுபவமே காரணமாக அமைகிறது. மலேயாவின் தலைமைச் சாலையான 'ஈப்போரோடு' இம் மூன்று கதைகளிலும் குறிக்கப்பட்ட முக்கியச் சொல் ஆகும்.

கோலாலம்பூரைச் சேர்ந்த புல் தரையும், நீரோடையும் உள்ள அழகிய பூங்காவாகிய பூமலை என்னும் பகுதி. 'ஆதாரம் இருக்கிறதா?' கார்வாங்கிய சுந்தரம்' ஆகிய இரண்டு கதைகளிலும் இடம் பெறுகிறது. மேலும், மலேயாவின் பகுதிகளான தைப்பிங், செந்தூல், காசிப்பிள்ளை, கம்பம், கோலசிலாங்கூர், ஸ்தாப்பா, மாக்ஸ்வெல்ரோடு, கிள்ளான் ரோடு, லொக்யூ ரோடு, சான்செங் ரப்பர் கம்பெனி, பீனாங், சுங்குரம்பை முதலியவை மேற்குறித்த கதைகளில் சுட்டப்பட்டுள்ளன.

அன்பளிப்பு என்ற நூலில் இடம் பெறும். 'ராஜா வந்திருக்கிறார்' என்ற சிறுகதையில் **"தெருவில் ஜன நடமாட்டம் தொடங்கிவிட்டது. மழையும் பரிபூரணமாக நின்றுவிட்டது. உதயத்தின் ஒளி சல்லாத்துணியைப் போல அவ்வளவு மெல்லியதான ஊரையும் உலகத்தையும் போர்த்தியது.**

**புதுத் துணிகளுக்கு மஞ்சள் வைத்துச் செல்லையாவும் உடுத்துக் கொண்டான். தம்பையாவும் உடுத்துக் கொண்டான். மங்கம்மாளும் பாவாடையையும் சட்டையையும் போட்டுக் கொண்டாள். ராஜா........ அவன் கௌபீனத்தோடு தான் நின்றான்."[7]**

'எங்கிருந்தோ வந்தார்' என்ற கதையில் "வேணு ஹார்பவேர் ஸ்டோர்" உரிமையாளர் வேணுகோபால், கோவில்பட்டிக்குக் குடும்பத்தோடு வந்து குடியேறிய நாளிலும் சரி' என்று கூறக் கூடிய நிலை உள்ளது. அதே கதையில் "குருமலைக் காத்து வேலூரிலே கிடைக்குமா? அது சரி, குருமலை ரொம்ப பக்கமா? கண்ணுக்கே தெரியவில்லையே" என்று குறிப்பிடுகிறார்.

'ஏமாற்றம்' கதையில் "முதல் முதலில் மனைவியை விட்டுப் பிரிந்து சென்னைக்கு போனபின், தசரா விடுமுறையில் ஒரு தடைவ ஊருக்கு வந்திருக்கிறான்." கதையின் முதன்மை மாந்தர் திருஷ்ணமூர்த்தியை பற்றிக் கூறுவதாக அமைந்துள்ளது. "எத்தனையோ குடும்ப நெருக்கடிகளையும் அலட்சியம் செய்து விட்டுத் திருநெல்வேலியை விட்டு போகாமல் என் சின்னஞ்சிறு கவலைகளையும் போக்க நீங்கள் எடுத்துக் கொண்ட சிரமங்கள் மறக்க முடியாதது" என மனைவி லெட்சுமி, கிருஷ்ணமூர்த்தியிடம் கூறுவதாக களம் அமைந்துள்ளது. "சென்னைக்கு வந்ததும் அவன் பிரிவின் வேதனைக்குச் சாந்தி தேடும் முறையில் லட்சுமிக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினான்" என்ற கதை கடிதத்திலேயே திருநெல்வேலியிலிருந்து சென்னை நோக்கியும், செல்வதும், வருவதுமாக கதைக் களம் அமைந்துள்ளது. இவருடைய கதை மாந்தர்கள்

பெரும்பாலோர் நெல்லையை சேர்ந்தவர்களாகவும், அப்பழக்க வழக்கங்களில் ஊறியவர்களாகவும் காணப்படுகின்றனர். கிராமியச் சூழலை அல்லது கிராம மக்களைக் கொண்டே இவர் பெரும்பாலான கதைகளை அமைத்துள்ளமைக்கும், அவைகள் ஏனைய கதைகளிலும் உயிரோட்டம் மிக்கவர்கள் உள்ளமைக்கும் அவர் கூறும் காரணம்.

"ராஜா வந்திருக்கிறார்" என்ற கதையில்...... அன்று பள்ளிக் கூடத்திலிருக்கும் போது ராமசாமிக்கும் செல்லையாவுக்கும் இடையே ஒரு போட்டி நடந்தது." என்று ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்குண்டான போட்டியை பள்ளியில் நடப்பதாக கதையின் களம் அமைந்துள்ளதாக கதை அமைந்துள்ளது.

இப்படியாக ஒரு ஊர் என்றால் அதில் பல்வேறு தெருக்கள் இருக்கும் பலவிதமான மனிதர்கள் வசித்து வருவார்கள் என்ற நிலைப்பாட்டினை தெளிவாக ராஜா வந்திருக்கிறார் என்ற கதை எடுத்துரைக்கின்றது.

**முடிவுரை:**

இடம் சார் அனுபவங்களை ஒட்டு மொத்தமாக நோக்கும் போது ஒவ்வொரு இடத்திலும் அவர் வாழ்ந்த காலத்திற்கேற்ப அவரது கதைகளில் இடச்சார்பு அமைந்திருப்பதைக் காணலாம். குறிப்பிட்ட ஒரு இடத்திலான அவரது வாழ்க்கை காலத்தையொட்டியே அவரது கதைகளில் எண்ணிக்கையும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். கதைகளை நோக்கும் போது மக்கள் தொகை பெருக்கம், விழாக்கால நிகழ்வுகள், குருமலையின் சிறப்பு என பல்வேறு செய்திகளை தம் கதைகளில் குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு இடத்தை மையமாக வைத்து கதையை வடிவமைத்துள்ளமையைக் காணலாம். இடமே கதையில் தோன்றுபவர் யார்? எப்படிப்பட்டவர் என்பதை வாசகனுக்கு உணர்த்தி நிற்கின்றது.

**அடிக்குறிப்பு:**

1. மா. இராமலிங்கம், விடுதலைக்கு முன் புதிய தமிழ்ச் சிறுகதைகள். ப.159.
2. பொதிய வெற்பன், வே.மு. புதுமைப்பித்தன் கதைகள் அகலமும் அழமும். பக்.47-48.
3. வல்லிக்கண்ணன், தாமரை. ப.13.
4. கு. அழகிரிசாமி, அன்பளிப்பு. ப.65.
5. கு. அழகிரிசாமி, அன்பளிப்பு, தேவஜீவனம் ப.30.
6. கு. அழகிரிசாமி, அன்பளிப்பு ப.33.
7. மேலது. ப.113.